*67*

# பரலோகத்தை நினைத்து ஏங்குதல்

## (21:22-22:5)

*நீங்கள் எப்போதாவது உங்கள் வீட்டிற்கு - செல்ல வேண்டும் என்று ஏங்கியது உண்டா? எண்ணிப்பார்க்க, எனக்குப் பலவேளைகள் உள்ளன: டெக்ஸாஸில், நியூயார்க் நகரில், உக்கிரைனில் மற்றும் வேறு இடத்திலும்.*[1] *இங்கு மிக முக்கியமான கேள்வி ஒன்றுள்ளது: நீங்கள் பரலோகம் செல்ல வேண்டும் என்று ஏங்கியது உண்டா? நமது முந்திய பாடத்தின் தொடக்கத்தில், "ஆத்துமாவின் இல்லம்" என்ற ஜேம்ஸ் ரோ என்பவரின் பாடலை நாம் குறிப்பிட்டோம். அந்தப் பாடல் பின்வரும் வார்த்தைகளை உள்ளடக்கியிருக்கிறது:* "Oft, in the storm, lonely are we, sighing for home, longing for Thee."[2] *("அடிக்கடி புயலிலும், தனிமையிலும் நாம், இல்லத்திற்காக நெட்டுயிர்த்து ஏங்குகின்றோம்.")*

*முந்திய பாடத்தில் நாம், "ஆத்துமாவின் இல்லம்" என்பது அழகு எழுச்சியுற்று விளங்குகிறது என்று குறிப்பிட்டோம். இப்போது நாம், இது மகிமையினால் ஒளிவீசி அன்பினால் நிறைந்துள்ளது என்பது பற்றிக் காண்போம். ஏவுதல் பெற்ற யோவானின் விவரிப்பு ஒவ்வொரு இருதயத்தையும் அங்கே செல்லும்படி ஏங்கச்செய்ய வேண்டும்.*

### *மகிமையினால் ஒளிவீசுதல் (21:22-27)*

**தேவனுடைய மகிமை (வசனங்கள் 22-25)**

*நமது முந்திய பாடமானது விலையேறப்பெற்ற கற்கள் மற்றும் விலைமதிப்புள்ள உலோகங்கள் பற்றி அதிகம் கூறுவதாக இருந்தது. ஆபரணக்கற்களோ அல்லது தங்கமோ, பரலோகத்தைப் பரலோகமாக்குவதில்லை; மாறாக தேவனுடைய பிரசன்னமே அதைச் செய்கிறது. 22ம் வசனத்தில் நாம், "அதிலே தேவாலயத்தை நான் காணவில்லை;*[3] *சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும் ஆட்டுக்குட்டியானவருமே அதற்கு ஆலயம்"*[4] *என்று வாசிக்கின்றோம். நகரமானது "நிறைவான மகாப்பரிசுத்த ஸ்தலமாக இருக்கும்" என்று ஏற்கனவே நாம் கூறியிருக்கின்றோம். அது தேவாலயம் ஒன்றைக் கொண்டிருக்கவில்லை, ஏனெனில் அதுவே தேவாலயமாக இருக்கிறது.*[5] *அது தேவன் தமது மக்களைச் சந்திக்கும்*

இடமாக இருக்கிறது; அது தேவனுடைய வாசஸ்தலமாக இருக்கிறது.

மேலும் யோவான், "நகரத்திற்கு வெளிச்சங்கொடுக்கச் சூரியனும் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை; தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது, ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு.[6] இரட்சிக்கப் படுகிற ஜனங்கள் அதன் வெளிச்சத்திலே நடப்பார்கள் ... அங்கே இராக்காலம் இல்லாதபடியால், அதின் வாசல்கள் பகலில் அடைக்கப் படுவதே இல்லை" (வசனங்கள் 23-25) என்று கூறினார்.[7]

யோவானுடைய நாட்களில், நகரங்கள் தங்கள் வாசல்களை இரவுவேளைகளில் மூடிவைத்தன. பரலோகத்தின் வாசல்கள் ஒருக்காலும் மூடப்படமாட்டா,[8] ஏனெனில் "அங்கே இராக்காலம் இராது." தேவன் மற்றும் ஆட்டுக்குட்டியானவர் ஆகியோரின் மகிமையானது ஒவ்வொரு வீதியையும் நிரப்பி, ஒவ்வொரு மூலையிலும் ஊடுருவும்.

**மக்களின் மகிமை (வசனங்கள் 24, 26)**

24ம் வசனத்தின் முதல் பாகம், பரலோகத்தின் மகிமையில் "ஜனங்கள் (மக்களினங்கள்) நடப்பார்கள்" என்று கூறுகிறது. இவ்வசனம் தொடர்ந்து, "பூமியின் ராஜாக்கள் தங்கள் மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள்" என்றும் கூறுகிறது. 26ம் வசனம், "உலகத்தாருடைய மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள்" என்று கூறுகிறது. இராஜாக்கள் தங்கள் மகிமையைக் கொண்டு வருவதன்மூலம் தங்களைக் காட்டிலும் பெரியவராய் இருக்கின்ற ஒரு ஆட்சியாளரை ஒப்புக்கொள்வார்கள் என்பதே இவ்விடத்தின் அடையாளத்துவமாக உள்ளது. வெளிப்படுத்தின விசேஷம் முழுவதிலும், கர்த்தரே மக்களினங்களின்மேல் அரசராக இருக்கின்றார், மற்றும் ஒரு நாளிலே எல்லாரும் அவரது கர்த்தத்துவத்தை ஒப்புக்கொள்வார்கள் என்பது வலியுறுத்தப்படுகிறது (2:26; 12:5; 15:3, 4). வாழ்ந்தவர்களிலேயே வல்லமை மிகுந்த ஆட்சியாளர்கள் பூமியின் மாபெரும் செல்வங்களைக் கொண்டுவந்து சிங்காசனத்திற்கு முன்பாக அவற்றைப் பரப்பி, தேவனே ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமாக இருக்கின்றார் என்று அறிக்கையிடுவதைக் கற்பனை செய்து பாருங்கள். இந்த அடையாளமானது, எல்லா மகிமையும் தேவனுக் குரியது, எல்லா மகிமையும் பரலோகத்தில் இருக்கும் என்பதை மறுவலியூட்டுகிறது.

துரதிர்ஷ்டவசமாக சிலர், "ஜனங்கள்" என்ற வார்த்தையின்மீது கவனம் குவித்து, இவ்வசனப்பகுதி உலகளாவிய இரட்சிப்பைப் போதிக்கிறது என்று முடிவுசெய்துள்ளனர். அவர்கள், "ஜனங்கள்" என்ற சொற்றொடர், வெளிப்படுத்தின விசேஷத்தில் பொதுவாக, அவிசுவாசிகளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டி (11:2, 9, 18; 14:8; 16:19),[9] இவ்விதமாக 21:24ம் வசனம், எல்லா மக்களும் - அவர்கள் விசுவாசித்தாலும் இல்லையென்றாலும் - இரட்சிக்கப்படுவார்கள் என்று போதிக்கிறதாக அவர்கள் முடிவுசெய்கின்றனர். தமிழ் வேதாகமத்தில், "இரட்சிக்கப்படுகிற ஜனங்கள்" என்று தெளிவாக உள்ளது. அவர்கள் இவ்வாறு முடிவுசெய்யக்கூடுவது எப்படி என்று நான் அறியவில்லை,

*ஏனெனில் அடுத்த வசனம், ''தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும்[10] நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள்''[11] என்று கூறுகிறது (வசனம் 27).*

*''எல்லா மக்களினங்களில் (ஜாதிகளில்),'' இருந்தும் இயேசுவில் விசுவாசம் கொண்டு அவரது இரத்தத்தினால் கழுவப்படுபவர்கள் இருப்பார்கள் என்று வெளிப்படுத்தின விசேஷம் போதிக்கிறது (5:9; 7:9). "ஜாதிகளில் (மக்களினங்களில்)" இருந்து வருகிற "மகிமை" என்பது பூமியில் ''வெளிச்சத்தில்'' நடந்த (1 யோவான் 1:7), மற்றும் பரலோகத்தில் தொடர்ந்து "[அவருடைய] வெளிச்சத்தில்'' நடக்க இருக்கும் (வெளிப் படுத்தின விசேஷம் 21:24) ஒவ்வொரு மக்களினத்தில் இருந்தும் பிரகாசிக்கும்.*

*தேவனே எல்லா மகிமைக்கும் ஆதாரமூலமாக இருக்கின்றார் (4:11). வேறு எந்த மகிமையும் அவரது மகிமையின் பிரதிபலிப்பாகவே உள்ளது.*

## *அன்பில் முழுவதும் நிறைந்திருத்தல் (22:1-5)*

*இந்த இடம் வரைக்கும், யோவான் தூரத்தில் இருந்து நகரத்தைப் பார்க்க அனுமதிக்கப்பட்டிருந்தார். 22:1-5ல் அவர், தேவன் தமது மக்களுக்கு இருப்பில் வைத்துள்ளவை என்ன என்பது பற்றிச் சற்றே உற்று நோக்குவதற்காக (நகரத்தின்) உள்ளே அழைக்கப்பட்டார் என்பது உறுதி. ("பரலோகத்தின் வீதி, நதி மற்றும் ஜீவவிருட்சம்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)*

***பரலோக அளிப்பு (வசனங்கள் 1-3அ)***

*நகரத்தின் அளவு, குடியிருப்பவர்கள் பலரை - தேவைகளைக் கொண்டுள்ள குடியிருப்பவர்களைக் - கருத்தாகத் தெரிவிக்கிறது, மற்றும் தேவன் ஒவ்வொரு தேவைக்கும் அளிப்புகளை ஏற்படுத்தியுள்ளார். ''உயிர்வாழ்வை நிலைநிறுத்துவதற்கு மூன்று அடிப்படைத் தேவைகள் அவசியமாய் உள்ளன; தண்ணீர், உணவு மற்றும் ஆரோக்கியம்.''[12] 22ம் அதிகாரத்தின் முதல் வசனம், இம்மூன்றையும் தேவன் தந்தருள்வார் என்று நமக்குக் கூறுகிறது - இந்த உருவகம் நகரம் என்பதில் இருந்து "தேவனுடைய பரதீசு'' என்பதற்கு மாறும் வேளையில் கூறப்படுகிறது (2:7). (ஓவியர் பிரையன் வாட்ஸ்ஸிடத்தில், நகரத்திற்குள்ளாக ஒரு அழகிய பூங்காவைச் சித்தரிப்பதின்மூலம் இவ்விரு கருத்துக்களையும் ஒன்றிணைக்கும்படி நான் கேட்டுக்கொண்டேன்.)*

*தூதன் யோவானுக்கு முதலில், ''பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிறதை''[13] காண்பித்தார் (22:1). மனிதர்கள், ஒருக்காலும் முதுமையடையாதபடிக்குக் காக்கும் கட்டுக்கதையான "இளமையின் ஊற்று" என்பதைத் தேடித்தேடித் தங்கள் வாழ்நாளைச் செலவிட்டுள்ளனர், ஆனால் அந்தத் தேடுதலிலேயே அவர்கள்*

*இறந்துபோயுள்ளனர். தேடுதலுக்கு அகப்பட்டிராத அந்த "ஊற்று" பூமியில் அல்ல ஆனால் பரலோகத்தில் உள்ளது என்பதை அவர்கள் உணர்ந்தறியத் தவறியுள்ளனர்; அது ஜீவனுக்கு ஆதாரமூலமான சிங்காசனத்தில் இருந்து பாய்ந்தோடி வருகிறது.*

*அடுத்ததாக யோவான், ஜீவவிருட்சத்தைக் கண்டதாகக் கூறினார், "நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின்[14] இருகரையிலும், பன்னிரண்டு விதமான[15] கனிகளைத் தரும் ஜீவவிருட்சம்[16] இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்'' (வசனம் 2அ). பாவத்தின் காரணத்தால் மனிதகுலத்தால் இந்த ஜீவ விருட்சம் இழக்கப்பட்டிருந்தது (ஆதியாகமம் 2:9; 3:6, 22-24), மற்றும் மனிதகுலத்தின்மீது ஒரு சாபம் வைக்கப்பட்டது (ஆதியாகமம் 3:16-19). இருப்பினும் பரலோகத்தில் ''இனி ஒரு சாபமுமிராது" (22:3அ),[17] மற்றும் ஜீவ விருட்சம் மீளக்கொண்டுவரப்படும் (2:7; 22:14, 19ஐக் காணவும்).[18]*

*(ஜீவவிருட்சம் எனப்படும்) மரத்தின் ஒவ்வொரு பாகமும் (பரலோக) நகரத்துக் குடிமக்களை ஆசீர்வதித்தது. அதன் இனிமைமிகு கனிகள் அவர்களின் பசியை ஆற்றின, அதன் இலைகள், "ஜனங்கள் ஆரோக்கிய மடைகிறதற்கு ஏதுவானவைகள்'' (வெளிப்படுத்தின விசேஷம் 22:2ஆ). பரலோகத்தில் நாம் எந்தக் கருத்தில் "குணமாக்கப்படுவோம்"? பாவம் என்பது சாபத்தை உண்டாக்கியதால் பாவத்தை நீக்குதல் என்பது அதற்குள்ளாகவே "குணமாக்குதல்" என்பதாக இருக்கும்.[19] உடல்ரீதியாக மற்றும் மனரீதியான பெருந்துன்பத்தில் இருந்து குணமாக வேண்டும் என்று ஏங்கும் ஆண்களையும் பெண்களையும் என்னைச் சுற்றிலும் நான் கண்ணோக்குகின்றபோது, ஒருவேளை இது பரலோகத்தில் உடல், மனம் மற்றும் ஆவி ஆகியவற்றில் கடைசியாகக் குணப்படுத்தப்படுவோம் என்பதற்கான வாக்குத்தத்தமாக இருக்கலாம் என்று நம்புகின்றேன். பின்வருவது பற்றி நாம் உறுதியாய் இருக்க முடியும்: பரலோகத்தில், நாம் எப்போதுமே நல்ல ஆரோக்கியத்தை மகிழ்வுடன் அனுபவித்துக் கொண்டிருப்போம்!*

***பரலோக பிரசன்னம் (வசனங்கள் 3அ, ஆ, 4)***

*ஆதியாகமம் 3ம் அதிகாரத்தின் சாபம், கடின உழைப்பையும் கண்ணீரையும் உண்டாக்கிற்று (ஆதியாகமம் 3:16-19), ஆனால் மனிதன் தேவனிடத்தில் இருந்து பிரிக்கப்பட்டான் என்பதே அந்த சாபத்தின் மிக பயங்கரமான பாகமாய் இருந்தது (ஆதியாகமம் 3:23, 24; ஏசாயா 59:2ஐக் காணவும்). அதன்பின்பு தேவன் தோட்டத்தில் முன்பு நெருங்கிய ஐக்கியமாய் மனிதனுடன் "உலாவியது" போல் மீண்டும் உலாவவில்லை (ஆதியாகமம் 3:8). இறுதியாக, பரலோகத்தில் இந்த சாபம் நீக்கப்படும் (வெளிப்படுத்தின விசேஷம் 22:3அ), மற்றும் "தேவனும் ஆட்டுக்குட்டி யானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும்" (வசனம் 3ஆ).*

*4ம் வசனம், அந்த நகரத்தின் குடிமக்கள் யாவரும் ''அவருடைய சமூகத்தைத் தரிசிப்பார்கள்'' என்று கூறுகிறது (வசனம் 4அ). பூமியில் எவரொருவரும் தேவனுடைய முகத்தைக் காண்பதற்கு அனு*

*மதிக்கப்படவில்லை (யாத்திராகமம் 33:20, 23), ஆனால் "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள்" ஒரு நாளிலே "தேவனை தரிசிப்பார்கள்" (மத்தேயு 5:8). எபிரெயக் கிறிஸ்தவர்களுக்கு நிருபத்தை எழுதியவர், தேவனைத் தரிசித்தல் பற்றிப் பேசினார் (எபிரெயர் 12:14). மீன்கள் தண்ணீருக்குள் வாழ்வதற் கென்றே ஏற்படுத்தப்பட்டிருப்பதுபோல், பறவைகள் ஆகாயத்தில் பறப்பதற்கென்றே ஏற்படுத்தப்பட்டிருப்பதுபோல், நமது ஆத்துமாக்களும் தேவனுடைய சமூகத்தில் வாழ்ந்து வளம்பெறவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது பரலோகத்து ஆசீர்வாதங்களில் மிகப் பெரியதாக இருக்கும் (21:3, 4ஐ மீண்டும் வாசிக்கவும்). "தேவனுடனும் அவரது குமாரனுடனும் இருத்தல் என்பதே பரலோகத்தின் சாராம்சமாக இருக்கும்."[20]*

*பின்பு, பின்வரும் விபரம் கூடுதலாகக் கூறப்படுகிறது: "அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும்'' (22:4). இது உரிமைத்துவத்தைக் குறிக்கிறது; நாம் கர்த்தருக்கு உரியவர்கள் (3:12; 7:3 ஆகியவற்றைக் காணவும்). மற்றும் இது, ஒன்றுபோலிருக்கும் தன்மையை மறைமுகமாய் எடுத்துரைக்கிறது: அவரது சமூகத்தில் நாம் அதிகம் அதிகமாய் அவரைப்போல் ஆவோம்.[21] இதே சத்தியத்தை யோவான் தமது நிருபங்கள் ஒன்றில் விளக்கப்படுத்தினார்: ''பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்வித மாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கின்றவண்ணாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்" (1 யோவான் 3:2).[22]*

### *பரலோக நோக்கம் (வசனம் 4அ)*

*4ம் வசனத்தின் இன்னொரு சொற்றொடரைக் கண்ணோக்காமல் தாண்டிச்செல்ல நாம் விரும்பமாட்டோம்: "அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து'' (வசனம் 4அ).[23] வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது பரலோகத்தைச் செயல்பாட்டின் - அர்த்தம்நிறைந்த செயல்பாட்டின் - இடமாக சித்தரிக்கிறது, தயக்கமான - ஆனால் - உறுதிப்பாடு வாய்ந்த பூரணத்துவியத்தவன் (குறைவின்மையை விரும்புகிறவன்) என்ற வகையில் நான், கர்த்தருக்கு எனது பூரணத்துவமற்ற சேவித்தல் குறித்து தொடர்ந்து சலிப்படைகின்றேன்; ஆனால் அந்த நகரத்தில் - அந்தப் பூரணத்துவமான சூழ்நிலையில் - நிறைவாக எனது சேவித்தல்கள் இருக்க வேண்டிய முறைப்படி இருக்கும் என்று நம்பியிருக்கத் துணிகின்றேன். தேவனைத் துதிப்பதை தவிர, நீங்களும் நானும் அங்கு என்ன செய்யும்படி அழைக்கப்படுவோம் என்பதை மிகச்சரியாக நான் அறிவதில்லை; ஆனால் நமது வேதவசனப்பகுதியானது, நமது இருத்தல் என்பது நோக்கமுள்ளதாக இருக்கும் என்பதை உறுதிப்படுத்துகிறது.*

### *பரலோக சிறப்புரிமை (வசனம் 5)*

*பரலோகத்தைப் பற்றி மன எழுச்சியூட்டும் - மற்றும் தாழ்மையான - சித்தரிப்பானது, கர்த்தர் பரலோகத்தின் வெளிச்சமாயிருப்பார் என்பதும்*

*மற்றும் கூடுதலான இன்னொரு வாக்குத்தத்தம் என்ற இரண்டு உறுதிப் பாடுகளுடன் முடிவடைகிறது. முதலாவது, "அங்கே இராக்காலமிராது" என்று நமக்கு மீண்டும் கூறப்படுகிறது (வசனம் 5அ). எனக்கு, இரவு வேளையில் எல்லாமே மிகமோசமானதாகக் காணப்படுகிறது. இருளில் எனது எதிர்ப்புத்திறன் குறைவாக உள்ளது மற்றும் எனது வேதனை வலுப்படுகிறது. "அங்கே இராக்காலம் இராதபடியால்" (21:25) தேவனுக்கு நன்றி! பின்பு நமக்கு, பரலோக நகரத்தில் வாழ்பவர்களுக்கு "விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள்மேல் பிரகாசிப்பார்" என்பது நினைவூட்டப்படுகிறது (22:5ஆ).*

*கடைசியாக நமக்கு, "அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள்" என்று கூறப்படுகிறது (வசனம் 5இ). வெளிப்படுத்தின விசேஷத்தின் முற்பகுதியில், கிறிஸ்தவர்கள் தற்போது கர்த்தருடன் ஆளுகை செய்து கொண்டிருக்கின்றனர் (5:10)[24] மற்றும், வேதசாட்சியாக மரித்தவர்கள் மரணத்திற்குப் பின்பும்கூட இயேசுவுடன் ஆளுகை செய்யத் தொடருகின்றனர் (20:6) என்பதைக் கண்டோம். இப்போது நமக்கு, அவருடனான நமது ஆளுகையானது நித்தியம் முழுவதிலும் தொடரும் என்று கூறப்படுகிறது![25] நாம் எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய் இருப்போம்!*

## *முடிவுரை*

*நீங்கள் பரலோகத்திற்குச் செல்வதற்கு ஏக்கமாய் இருக்கின்றீர்களா என்று இந்தப் பாடத்தின் தொடக்கத்தில், நான் உங்களைக் கேட்டேன். ஆத்துமாவின் இல்லம் பற்றிய தெய்வீகச் சித்தரிப்பை - அதாவது, பரலோகம் என்பது அழகு எழுச்சியுறும் இடமாக, மகிமை கதிர்வீசும் இடமாக, மற்றும் அன்பு நிறைந்த இடமாக இருக்கும் என்று - நாம் கண்டுள்ள நிலையில் இப்போது, நீங்கள் பரலோகம் செல்வதற்கு ஆயத்தப்பட போதிய அளவு ஏக்கம் கொண்டிருக்கின்றீர்களா? என்பது கேள்வியாக உள்ளது.*

*பரலோகத்தில் தேவன் என்னிடத்தில் என்ன வகையான சேவையைக் கேட்பார் என்று நான் அறிவதில்லை, ஆனால் இங்கு அவர் என்னிடத்தில் என்ன கேட்கின்றார் என்பதை நான் அறிந்துள்ளேன்: அவர் எனது விசுவாசத்தையும் ஒப்புவிப்பையும் விரும்புகின்றார்; அவர் எனது கீழ்ப்படிதலையும் பற்றுறுதியையும் விரும்புகின்றார்.[26] இவற்றை அவருக்குக் கொடுக்க நான் மனவிருப்பமாக இருக்கின்றேனா? நீங்கள் அவ்வாறு இருக்கின்றீர்களா? ஒரு வாக்கெடுப்பில் ஆய்வு செய்யப் பட்டவர்களில் 87 சதவிகிதம் பேர், தாங்கள் பரலோகம் செல்ல வாய்ப்பு உள்ளது என்று நம்புவதாகக் கூறினர்.[27] கர்த்தருடைய புள்ளியியல் விபரங்கள் அந்த அளவுக்கு நம்பிக்கையூட்டுபவைகளாக இருப்பதில்லை (மத்தேயு 7:13, 14ஐக் காணவும்). இந்த விஷயத்தில் உங்களை நீங்களே வஞ்சித்துக் கொள்ளாதிருங்கள்: மூர்க்கமான நேர்மையுள்ளவர்களாய் இருங்கள்: நீங்கள் தயாராக இருக்கின்றீர்களா? நான் தயாராக இருக்க*

*வில்லை என்று நான் அறிந்தால், கர்த்தருடைய கிருபையை எனதாக்கிக் கொள்ளும் வரைக்கும், நான் ஒரு சிறிதளவுகூட உண்ணமாட்டேன் அல்லது ஒரு கண்ணிமைப்பொழுதுகூட உறங்கமாட்டேன். உங்கள் பதில்செயலும் இதேபோலிருக்கும் என்று நான் நம்புகின்றேன்.*

---

*குறிப்புகள்*

[1]*நீங்கள் இல்லம் திரும்ப ஏக்கமாய் இருந்த குறிப்பிட்ட சில வேளைகளைப் பற்றிப் பேசுவதற்கு நீங்கள் விரும்பலாம். இல்லம் திரும்பும் ஏக்கம் பற்றிய பிற விவரிப்புக்களை, உங்கள் உரையைக் கேட்பவர்கள் அடையாளம் காணக்கூடிய விவரிப்புக்களைக் கொடுக்க நீங்கள் விரும்பலாம்.* [2]James Rowe, "Home of the Soul," *Songs of Faith and Praise*, ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [3]*முன்னதாக, ஜெயங்கொள்கிறவர்கள் "இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்'' என்று கூறப்பட்டது (7:15), அதே வேளையில் நமது தற்போதைய வசனப்பகுதியானது, இராக்காலம் இராது என்றும் (22:5), ஆலயம் இராது என்றும் (21:22) கூறுகிறது. இது, அடையாளத்துவ மொழிநடையின் நீர்மைத்தன்மையை (மாறக்கூடிய இயல்பை) மாத்திரமே குறிக்கிறது. "இரவும் பகலும்" என்பது "சதா காலமும்" என்பதைக் குறிப்பிடுகிறது, அதே வேளையில் ''அவரது ஆலயம்'' என்பது ''பரலோகம்'' என்பதையே குறிப்பிடுகிறது. "வெளிப்படுத்தின விசேஷம், 2" என்ற புத்தகத்தில் காணப்படும் "புயலுக்கு மேலாக உயருதல்" என்ற பாடத்தில் 7:15ன் மீதான குறிப்புகளைக் காணவும்.* [4]*இந்தப் பாடத்தின் அடிக்குறிப்புகள், யோவானால் பயன்படுத்தப்பட்டுள்ள மொழிநடையில் பிரதிபலிக்கக்கூடிய பழைய ஏற்பாட்டு வசனப்பகுதிகள் பலவற்றைப் பட்டியலிடுகிறது. இவற்றில் பல எசேக்கியேலின் புத்தகத்தில் இருந்து எடுத்தாளப்படுகின்றன. இருப்பினும் பின்வரும் "திரிபை" கவனிக்கவும்: எசேக்கியேல், தமது இலட்சிய நகரத்தில் மீளக்கட்டுவிக்கப்பட்ட தேவாலயம் குறித்து ஏழு அதிகாரங்களைச் செலவிட்டிருந்தார். அதேவேளையில் யோவான், தாம் விவரித்த நகரத்தில் "தேவாலயமே" இல்லை என்று கூறினார்.* [5]*இந்த நகரம் மகிமைப்படுத்தப்பட்ட சபையைக் குறிக்கிறது என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். கிறிஸ்தவ யுகத்தில் சபையை தேவனுடைய ஆலயமாக, அவர் வாசம் பண்ணுகிற விசேஷித்த இடமாக உள்ளது என்று வலியுறுத்தினார் (1 கொரிந்தியர் 3:16; எபேசியர் 2:21).* [6]*தேவன் வெளிச்சமாயிருக்கிறார் என்பது பற்றி சங்கீதம் 36:9; ஏசாயா 60:19, 20; 1 யோவான் 1:5 ஆகியவற்றைக் காணவும். இயேசு வெளிச்சமாயிருக்கிறார் என்பது பற்றி யோவான் 1:9; 3:19; 8:12; 12:35 ஆகிய வசனங்களைக் காணவும்.* [7]*ஏசாயா 60:11ஐ ஒப்பிடவும்.* [8]*திறந்த வாசல்களின் அடையாளம், நியாயத்தீர்ப்பு நாளுக்குப் பின்பும் இந்த விண்ணக நகரில் மக்கள் தொடர்ந்து வந்துகொண்டும் போய்க்கொண்டும் இருப்பார்கள் என்று மறைமுகமாய் உணர்த்துவதில்லை. திறந்த வாசல்கள் என்பது பாதுகாப்பின் அடையாளமாக மாத்திரம் உள்ளது.* [9]*"வெளிப்படுத்தின விசேஷம், 3'' என்ற புத்தகத்தில் காணப்படும் "நாம் அளவுக்கேற்றபடி இருக்கின்றோமா?'' என்ற பாடத்தின் முடிவில் வரும் குறிப்பு எண் 17ல், "இது ("ஜாதிகள்" என்ற வார்த்தை), வெளிப்படுத்தின புத்தகத்தில் வழக்கம்போல், கிறிஸ்துவுக்கு எதிராகக் கலகம் செய்பவர்களை குறிக்கிறது" என்று நான் கூறியிருந்தேன். "வழக்கம்போல்" என்ற வார்த்தை குறிப்பிடத்தக்கதாக உள்ளது: ''வழக்கம்போல்'' தானே தவிர,*

எப்போதுமே அல்ல. [10]இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளவற்றில் பெரும்பான்மையான சொற்றொடர்கள் 21:8ல் காணப்படுகின்றன. (இந்தப் புத்தகத்தில் “சகலத்தையும் புதிதாக்குதல்'' என்ற பாடத்தில் அந்த வசனங்கள் மீதான விளக்கங்களைக் காணவும்.) “அசுத்தமானது” என்ற சொற்றொடர் விக்கிரகாராதனைக்கு அடிக்கடி பயன்படுத்தப்பட்டது, ஆனால் இதை ஒரு பொதுவான கருத்திலும் பயன்படுத்த முடியும். KJV வேதாகமத்தில் “any thing that defileth” என்றுள்ளது.

[11]இந்த புத்தகத்தின் முற்பகுதியில் காணப்படும், “நியாயத்தீர்ப்பைப் பற்றி நீங்கள் அறியவேண்டிய ஐந்து உண்மைகள்” என்ற பாடத்தில் ஜீவபுஸ்தகம் பற்றிய குறிப்புகளைக் காணவும். [12]Ray Summers, *Worthy Is the Lamb* (Nashville: Broadman Press, 1951), 214. [13]வெளிப்படுத்தின விசேஷத்தில், ‘‘தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம்'' என்ற சொற்றொடர், 22ம் அதிகாரத்தில் மாத்திரமே உள்ளது (வசனங்கள் 1, 3), ஆனால் இருவரும் (அதிகாரத்துவ இடமான) சிங்காசனத்தில் இடம்பெற்றுள்ளனர் என்ற கருத்து இதற்கு முன்பாக பல முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன (3:21; 12:5). [14]இருப்புநிலையில், வீதி, நதி மற்றும் மரம் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள தொடர்பு பற்றிக் கிரேக்க வசனம் தெளிவற்றுள்ளது. பிரையன் வாட்ஸிடத்தில் நான் கேட்டுக்கொண்ட வகையானது ஒரு சாத்தியமான ஏற்பாடாக உள்ளது, ஆனால் மற்ற சில சாத்தியக்கூறுகளும் உள்ளன. நகரத்தின் திட்டம் பற்றியல்ல, ஆனால் தேவனுடைய அளிப்பின் உறுதிப்பாடு பற்றிய பாடமாக இருப்பதே இவ்வசனப்பகுதியின் நோக்கமாக உள்ளது. [15]எனது NASB வேதாகமத்தின் பிரதியில் பின்வரும் பக்க ஓரக்குறிப்பு உள்ளது: “Or, crops of fruit” (“அல்லது பழத்தின் பயிர்விளைச்சல்”). கனியின் பல்வேறு வகை என்பதற்கு மாறாக, கனியானது தொடர்ந்து அளிக்கப்படும் என்பதின்மீதே வலியுறுத்தம் இருக்கலாம். எவ்வகையிலும், பரலோகத்தில் தேவன் நமது தேவைகள் ஒவ்வொன்றையும் நிறைவேற்றுவார் என்று இவ்வசனப்பகுதி கூறுகிறது. [16]சங்கீதம் 46:4; எசேக்கியேல் 47:1-12; யோவேல் 3:18; சகரியா 14:8 ஆகியவற்றிலுள்ள விவரிப்புகளைக் காணவும். [17]22:3அ வை சகரியா 14:11ஆ வுடன் ஒப்பிட்டுப்பார்க்கவும். [18]இந்த ஜீவவிருட்சம் (ஒருமை எண்) “நதியின் இருகரையிலும்” எவ்வாறு இருக்க முடியும்? என்று சிலர் வியப்படையலாம். ஒரு மரத்தில் இருந்து தொலைதூரம் பரவும் வேர்களில் இருந்து முளைத்து வளர்ந்ததாக (என்னிடம் கூறப்பட்ட) பெரிய காடு ஒன்றை நான் கண்டிருக்கிறேன். ஆகையால் ஒரு வேர் அமைவுடன் கூடிய பல “மரங்களை”ப் பற்றி நீங்கள் நினைக்க முடியும். அடையாளத்துவ மொழிநடையில் உள்ள சீர்பொருத்தமற்ற தன்மை பற்றி நாம் கவலைப்படக்கூடாது. [19]கிறிஸ்தவர்களின் ‘‘ஜீவவிருட்சத்தை'' சில எழுத்தாளர்கள் இயேசுவின் சிலுவையுடன் இணைவுபடுத்துகின்றனர்: புதிய ஏற்பாட்டில் அவ்வப்போது, “சிலுவை” என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை, “மரம்” அல்லது “மரக்கட்டை” என்றே நேரடியாக அர்த்தப்படுகிறது. (நடபடிகள் 5:30; 10:39; 13:29 ஆகியவற்றை NASB மற்றும் KJVயில் ஒப்பிட்டுப் பார்க்கவும்.) இயேசுவின் பலியின் மூலமாக நாம், ஆவிக்குரிய வகையில் குணமாக்கப்பட்டுள்ளோம் (ஏசாயா 53:5ஐக் காணவும்). [20]J. W. Roberts, *The Revelation to John* (*The Apocalypse*), The Living Word Commentary Series (Austin, Tex.: Sweet Publishing Co., 1974), 194.

[21]தேவனுடைய நாமம், அவர் யார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது, மற்றும் மனிதனுடைய நெற்றி அவனது சிந்தையை மூடியிருக்கிறது. நெற்றியில் தேவனுடைய நாமம் எழுதப்பட்டிருத்தல் என்பது, தேவனுடைய பண்பு சிந்தையில் செயல்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் இந்தவிதமாக, முழு நபரின்மீது அது செயல்தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்றும் அர்த்தப்படுகிறது. [22]2 கொரிந்தியர்

*3:18ன்படி, அந்த மறுரூபம் இந்த வாழ்விலேயே தொடங்குகிறது. அது இனிவரும் வாழ்வில் நிறைவடைகிறது. [23]"சேவித்தல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை "மதரீதியான ஊழியத்தை" அர்த்தப்படுத்த முடியும் என்பதால், சில மொழிபெயர்ப்புகள் "அவரை ஆராதிப்பார்கள்" என்ற வார்த்தையைக் கொண்டுள்ளன. நமது பரலோக சேவையின் இந்த மற்றும் பிற அம்சங்களின்மீதான கருத்துக்களை, "வெளிப்படுத்தின விசேஷம், 2" என்ற புத்தகத்தில் காணப்படும் "புயலுக்கு மேலாக உயருதல்" என்ற பாடத்தில் 7:15க்கான குறிப்புகளில் காணவும். [24]"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் காணப்படும் "ஆண்டவரே, எதுவரைக்கும்?" என்ற பாடத்தில் 1:5, 6க்கான குறிப்புகளையும் அத்துடன் "வெளிப்படுத்தின விசேஷம், 3" என்ற புத்தகத்தில் காணப்படும் "நாம் அளவுக்கேற்றபடி இருக்கின்றோமா?" என்ற பாடத்தில் 5:10க்கான குறிப்புகளையும் காணவும். [25]கிறிஸ்தவர்கள் மற்றவர்களின்மீது ஆளுகை செய்வார்கள் என்பது பற்றி வசனப்பகுதியில் குறிப்பு எதுவும் இல்லை; இந்தச் சொற்றொடர், நாம் இராஜரீகக் குடும்பத்தின் அங்கமாயிருப்போம் என்று மாத்திரமே உறுதிப்படுத்துகிறது. "வெளிப்படுத்தின விசேஷம், 3" என்ற புத்தகத்தில் காணப்படும் "நாம் அளவுக்கேற்றபடி இருக்கின்றோமா?" என்ற பாடத்தில் 5:10க்கான குறிப்புகளையும், இந்தப் புத்தகத்தின் முற்பகுதியில் காணப்படும் "கிறிஸ்துவுடன் ஆளுகை செய்தல்" என்ற பாடத்தில் 20:6க்கான குறிப்புகளையும் காணவும். [26]நீங்கள் இந்தப் பாடத்தை ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தினால், ஒருவர் கிறிஸ்தவராவதற்கு அல்லது தேவனுடைய பிள்ளையாயிருந்து தவறு செய்கின்றவர் மீளக்கட்டுவிக்கப்படுவதற்குத் தேவையான விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் பற்றி விளக்கப்படுத்துங்கள். உங்கள் புத்திமதியின் ஒரு பாகமாக, நீங்கள் 1 யோவான் 3:2, 3 மற்றும் எபிரெயர் 12:14 ஆகிய வசனங்களைப் பயன்படுத்த விரும்பலாம். [27]*"Oprah: A Heavenly Body?" *U. S. News & World Report* (31 March 1997): 18.

---

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *பல்வேறு மக்களினக் குழுக்களிலும் உள்ள நீதிமான்கள் பரலோகத்தில் இருப்பார்களா? ("ஜனங்கள்" என்பதற்கான கிரேக்க வார்த்தை "மக்களினக் குழுக்கள்" என்று நேரடியாக அர்த்தப் படுகிறது.) பல்வேறு மக்களினக் குழுக்களின் உறுப்பினர்களும் பரலோகத்தில் இருப்பார்கள் என்றால், இந்த மக்களினக்குழுக்கள் இந்த பூமியில் வாழும்போது ஒருவர் பிறருடன் ஒற்றுமையாக இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று நீங்கள் நினைக் கின்றீர்களா?*
2. *இந்தப் பாடத்தின்படி, "பரலோகத்தைப் பரலோகம் ஆக்குவது" எது?*
3. *மக்கள் உயிர்வாழ்வை நிலைநிறுத்திக்கொள்வதற்கு அவசியமான மூன்று விஷயங்கள் யாவை? இதைவிட அதிகமானவை தேவை என்று நாம் நினைக்கின்றோமா? 22:1, 2ன்படி, இந்தத் தேவைகள் ஒவ்வொன்றும் பரலோகத்தில் எந்த அளவுக்குச் சந்திக்கப் படுகின்றன?*

*4. பரலோகத்தில் நாம் தேவனை சேவிப்போம் என்று 22:4அவில் வாசிக்கின்றோம். பின்வரும் சிந்தனைக்குரிய கேள்வியை ஆழ்ந்து சிந்திக்கவும்: அங்கே நாம் என்ன செய்யும்படி கேட்டுக்கொள்ளப் படுவோம்? இது பற்றி நீங்கள் நினைப்பது என்ன? (இந்தத் தகவலை வேதாகமம் நமக்குக் கொடுப்பதில்லையாதலால், இந்தக் கேள்விக்குச் சரியான அல்லது தவறான விடை என்று எதுவும் இருப்பதில்லை.)*

*5. நீங்கள் "பரலோகம் செல்வதற்கு ஏக்கமாய்" இருக்கின்றீர்களா? - நீங்கள் அங்கிருக்க வேண்டும் என்று பெரிதும் விரும்புகின்றீர்களா?*

*6. நீங்கள் பரலோகம் செல்ல ஆயத்தமாய் இருக்கின்றீர்களா?*



பரலோகத்தின் வீதி, நதி மற்றும் ஜீவவிருட்சம் (22:1, 2)